10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 02 | அதிர்வு 05 | சனிக்கிழமை 05 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18



## வடக்கில் இருப்பது ஆபத்தான படையல்ல அமைதிப்படையே!
### கதை விடுகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மே 05

வடக்கில் தற்போது இருப்பது அமைதி படையே தவிர இராணுவம் அல்லவென வடக்கு ஆளுநர் ரெஜினோல் ட் கூரே தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் பலாலியில் நடைபெற்ற ஒன்பதாவது போர் வீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் 06▶

## பால்மா விலையும் அதிகரிப்பு



கொழும்பு, மே.05

அனைத்து விதமான பால் மாவின் விலைகளும் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் 1 கிலோ கிராம் நிறையுடைய பால் மாவின்விலை 50 ரூபாவாலும்400 கிராம் நிறையுடைய பால் மா விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப் பட்டுள்ளது. 06▶

## வவுனியா சிறையில் அநீதி போட்டுடைத்தார் கைதி

வவுனியா, மே 05

வவுனியா சிறைச்சாலையில் சிறைக் காவலர்களும் நீண்ட காலமாக தடுத்து வைத்திருக்கின்ற சிறைக்கைதிகளும் இணைந்து செய்யும் அநீதிகளை நேற்றையதினம் வவுனியா நீதிமன்றத்தில் விசாரணைக்காக வருகை தந்த விளக்கமறியல் கைதி பதில் நீதிவானிடம் அம்பலப்படுத்தியுள்ளார்.

வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காக வவுனியா சிறைச்சாலையில் இருந்து அழைத்து வரப்பட்ட விளக்கமறியலில் உள்ள கைதி 06▶

## 20 ஆபத்து
### பிக்குகள் போர்க்கொடி

கொழும்பு, மே 05

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்த சட்டத்தைக் கொண்டு வந்தால் அதனை தாம் முற்றாக எதிர்ப்பதாகவும் இதன்மூலம் நாட்டின் இறைமைக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்படுமெனவும் பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடிய தேசிய பிக்குகள் முன்னணி இவ்வாறு தெரிவித்துள்ளது.

20 ஆவது திருத்த சட்டத்தை ஒழிக்கும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை ஜே.வி.பி. நாடாளுமன்றில் கொண்டு வரவுள்ளது. கூட்டு எதிரணியின் மகிந்த ராஜபக்ஷ 06▶

## முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் முதன்மை சுடரேற்றும் நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், மே.05

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மே 18ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு முதன்மைச்சுடர் ஏற்றப்படும். அதனை போரில் உறவுகளை இழந்த வயது முதிர்ந்த தாயார் ஒருவர் ஏற்றிவைப்பார். 06▶

## ஆட்சிக்கு வருவார் மகிந்த
### அச்சத்தில் பொன்சேகா

கொழும்பு, மே 05

கடந்த அரசாங்கத்தில் பாரிய மோசடிகளில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே 03▶

# முள்ளிவாய்க்காலில் அரசியலுக்கு இடமில்லை



யாழ்ப்பாணம், மே 05

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாளில், கட்சிசார் அரசியலுக்கு இடமில்லை. அங்கு சுயலாப அரசியலையும், தனிப்பட்ட கட்சிகளை விமர்சிப்பதுக்கும் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு, யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். யாழ்.மறைமாவட்ட நீதி சமாதானத்துக்கான ஆணைக்குழுவின் ஊடகவியலாளர் சந்திப்பு, கொழும்புத்துறை குருமடத் 06▶

## வடக்கில் தமது செயற்பாட்டின் மூலம் மக்களை கவர நினைக்கும் படையினர்
### ஆபத்து என எச்சரிக்கிறார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், மே 05

வடக்கில் அண்மைக் காலமாக இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை தந்திரோபாயமாக முன்னெடுத்து வருகின்றார்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பது, கிணறு வெட்டிக் கொடுப்பது, குளங்கள், கடலோரங்கள் போன்றவற்றை சுத்தப் படுத்திக் கொடுத்தல், வாழ்வாதாரங்கள் கொடுத்தல், வெசாக் பண்டிகை போன்ற தினங்களில் கௌதமரின் பெயரைச் சொல்லி களியாட்டங்களையும், உணவகங்களையும் 06▶

## அஸ்மினுக்கு எதிராக யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மினுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் சிலர் நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை சண்முகானந்தா இந்துக் கல்லூரியில் அண்மையில் எழுந்த ஹபாயா ஆடை விவகாரத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப் பாட்டை ஆதரித்து வடமாகாண சபை உறுப் 03▶



## அதிபர் மீது தாக்குதல்
### மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி, மே 05

கிளிநொச்சி - பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் அதிபர் கடமை நேரத்தில் தாக்கப்பட்டமையை கண்டித்தும் தாக்குதல் மேற்கொண்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரியும் பாடசாலை மாணவர்களினால் நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்பட்டது. 03▶

# கூட்டாட்சியில் மாற்றம் ஏற்படாது

## மஹிந்த அமரவீர திட்டவட்டம்

கொழும்பு, மே 05

சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்து முன்னெடுக்கும் கூட்டாட்சியில் எந்த மாற்றங்களும் இனி ஏற்படாது. புதிய அமைச்சரவையுடன் தேசிய அரசாங்கம் தொடர்ந்தும் செயற்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



விவசாயத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் உள்ளிட்ட விடயங்கள் காரணமாக அரசாங்கம் அண்மைக் காலமாக பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இதன் காரணமாக அரசாங்கம் சில பின்னடைவுகளையும் சந்தித்திருந்தது. எனினும், தற்போது அரசாங்கம் சந்தித்த நெருக்கடிகள் குறைவடைவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

தற்போது அமைச்சரவையில் பகுதியளவு மாற்றங்கள் ஏறபடுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய புதிய அமைச்சுக்கான பொறுப்புக்கள் அடங்கிய வர்த்தகமானி அடுத்த வாரம் வெளியிடப்பட உள்ளது. அதன்படி புதிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற அனைவரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம். அரசாங்கத்தில் காணப்பட்ட குறைகளைச் சரி செய்து வெற்றிப் பாதையில் தொடர்ந்தும் பயணிப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்த தேசிய அரசாங்கத்தில் இரு கட்சிகளாலும் முன்வைக்கப்படும் கொள்கைகளில் சிறந்தவற்றை எடுத்து, அவற்றின் மூலம் நாட்டை மேலும் முன் கொண்டு செல்ல முடியும். இரு கட்சிகளும் எதிர்காலத்தில் அடுத்த தேர்தலில் தமது கட்சியை வெற்றி பெறச் செய்வது எவ்வாறு? அதிகாரத்தை கைப்பற்றுவது எவ்வாறு? போன்ற விடயங்களில் தமது கவனத்தைச் செலுத்தாது, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது தொர்பிலேயே தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். தற்போது அதிகாரம் உடையவர்கள் வேலை செய்வதற்கு சோம்பல் படுகின்றனர். அதே போன்று அதிகாரம் கைகளில் இல்லாதவர்கள் அதனை எவ்வாறு பெறுவது என்பதில் மும்முரமாக உள்ளனர். இவை இரண்டுமே நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடை ஆகும்." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# மலேரியா அற்ற நாடாக இலங்கை மாற்றம்

மட்டக்களப்பு, மே 05

உலகத்தில் இரண்டு நிமிடங்களுக்கு ஒருவர் மலேரியா நோயால் உயிரிழக்கின்றனர். ஆனால், இலங்கை மலேரியா அற்ற நாடாக மாறியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட மலேரியா நோய்த் தடுப்புப் பிரிவு வைத்திய அதிகாரி மேகலா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியா போன்ற வெளிநாடுகளில் இருந்து வருபவர்களே மலேரியாவை இலங்கைக்கு காவி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த ஐந்து வருடங்களில் 4 பேர் மாத்திரமே மலேரியா நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில், 2013 ஆம் ஆண்டு மலேரியாத் தொற்றுக்கு எவரும் ஆளாக வில்லை. 2014 ஆம் ஆண்டில் இருவருக்கும், 2015 ஆம் ஆண்டு இருவருக்கும் மலேரியா நோய் ஏற்பட்டது. அத்துடன், 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் மலேரியாவால் யாரும் பாதிக்கப்படவில்லை.

அதே போன்று நடப்பாண்டிலும் இதுவரை யாருக்குமே மலேரியா ஏற்படவில்லை. மலேரியா இல்லாத நிலையில் எமது நாடு காணப்பட்டாலும், இதை நாங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மலேரியா நமது நாட்டுக்குள் வராமல் நமது நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# பஸிலின் வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு, மே 05

பொருளாதார அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது திவிநெகும (வாழ்வின் எழுச்சி) அபிவிருத்தித் திணைக்கள நிதியின் 295 இலட்சம் ரூபா பணத்தைப் பயன்படுத்தி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உருவப்படம் அடங்கிய 50 இலட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்டு விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, அவர்கள் இருவருக்கும் எதிராக மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, ஒத்திவைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. (ஆ)

# ஜே.வி.பி.யின் கருத்து நாட்டுக்கு ஆபத்தானது

## ராகுல தேரர் அதிருப்தி

கொழும்பு, மே 05

இது சிங்கள நாடு அல்ல என்ற ஜே.வி.பியின் கருத்து நாட்டுக்கு ஆபத்தானது என்று கொட்டபிட்டிய ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

இது சிங்கள நாடு அல்ல என்று அண்மையில் பி.பி. சி. செய்திச் சேவைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அளித்த செவ்வி தொடர்பில் ஊடங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நாட்டில் வாழ்கின்ற பௌத்த மக்கள், ஜே.வி.பியினருக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காகவா அவர்கள் இதுபோன்ற அறிவிப்புக்களை செய்கின்றனர். பௌத்த மக்களின் ஆதரவால் அவர்களால் ஒருபோதும் ஆட்சிக்கு வர முடியாது எனக் கருதுகின்றமை கூட, அவர்கள் பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிக்க காரணமாக இருக்கலாம். அல்லது வேறு யாருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவா இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர் என்பது புரியவில்லை. " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# ஜனாதிபதி செயலணி பிரதானிக்கு மறியல்!

கொழும்பு, மே 05

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரின் கைது செய்யப்பட்ட ஜனாதிபதி செயலணி பிரதானி குசும்தாச மஹானாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், பீ.திஸாநாயக்க ஆகியோரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையில், இந்திய வர்த்தகர் ஒருவர் வாங்கிய பங்குகளை அதிகரிப்பதாக வாக்குறுதி அளித்து, அவரிடமிருந்து லஞ்சமாக 20 மில்லியன் ரூபா பணத்தை, நேற்றுமுன்தினம் பெறும் போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஆ)

# இலங்கை டீ கப் சர்வதேச சைக்கிளோட்டப் போட்டி பாசிக்குடாவில் ஆரம்பம்





பாசிக்குடா, மே 05

கிழக்கையும், மேற்கையும் பாலமாக இணைக்கும் இலங்கை டீ கப் சர்வதேச சைக்கிளோட்டப் போட்டி பாசிக்குடாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம தலைமையில் நேற்று முற்பகல் ஆரம்பமான இந்தப் போட்டி, பாசிக்குடாவில் இருந்து மஹியங்கனை ஊடாகக் கண்டிக்குச் சென்று, கண்டியில் இருந்து நீர்கொழும்பை வந்தடைய உள்ளது.

இந்தப் போட்டியில் 70 க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ள இந்தப் போட்டியின் மொத்தத் தூரம் 350 கிலோமீற்றர்களாகும்.

இந்த மூன்று நாள் போட்டியில் இலங்கைத் தேசிய அணியும், ஜனாதிபதி அணியும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், அவுஸ்ரேலியா, பிரான்ஸ், ஜப்பான், கஸகஸ்தான், தென் கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் லாவோஸ் போன்ற நாடுகள் இதில் பங்குகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

எதிரொலி Ethiroli
சனி, 05 மே 2018 ethirolimedia@gmail.com

## ஏறுது ஏறுது எல்லாம் ஏறுது

அடுத்தடுத்து ஒவ்வொரு அத்தியாவசியப் பொருட்களினதும் விலையை உயர்த்திக் கொண்டே போகின்றது நல்லாட்சி அரசு. இனிமேல் அப்படி நல்லாட்சி அரசு என்று சொல்வதற்கான குறைந்தபட்ச தகுதி கூட இந்த அரசுக்கு இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே. ஒன்றுக்கு நான்குதரம் அமைச்சரவையை மாற்றியதையும், மத்திய வங்கியின் பிணைமுறியை விழுங்கி ஏப்பம் விட்டதையும் தவிர வேறெந்த வேலையையும் நல்லாட்சி அரசு செய்து கிழித்துவிடவில்லை.

அரசில் அங்கம் வகிக்கும் ரஞ்சன் ராமநாயக்க சொல்வதைப் போல "ஏதேனும் ஊழல் செய்தால் மட்டுமே இந்த அரசில் அமைச்சுப் பதவி கிடைக்கும்" என்பது உண்மையாகாவே படுகின்றது. அவரென்னவோ தனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற வயிற்றெரிச்சலில் சொன்னாலும் கூட, நடப்பதெல்லாம் அப்படித்தான் இருக்கிறது. எந்தவொரு அமைச்சருக்கும் தான் பதவி வகிக்கும் அமைச்சுப் பற்றிய துறைசார் நிபுணத்துவம் கிடையாது. அதனால் அமைச்சு ரீதியாக அவர்கள் எடுக்கும் முடிவுகள் எல்லாமே அதிரிபுதிரியாக இருந்தாலும், கடைசியில் தலையைச் சுவரில் மோதிக் கொள்ளுமளவுக்கு முட்டாள்தனமாகவே முடிகின்றன.

சட்டம் ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டிருந்தால், குறைந்தபட்சம் மகிந்த குடும்பம் செய்த அக்கிரமங்களின் ஒரு பகுதியையாவது, தனது தனிப்பட்ட பகைமை காரணமாக வெளிக்கொணர்ந்திருப்பார். யாருக்கு என்ன அமைச்சுக் கிடைக்கும் என்பது, சங்கீதக் கதிரை போல, அவர்களுக்கே கடைசிக் கணத்தில் தான் தெரிகின்றது. அந்தளவுக்கு இருக்கின்றது அரசின் போக்கு.

"மகிந்த குடும்பம் நாட்டின் சொத்துக்களைச் சூறையாடியதாலேயே, பொருட்களின் விலைகள் இப்படி யானைவிலை, குதிரை விலையாக இருக்கின்றன. நாங்கள் எப்படி பொருட்களின் விலையைக் குறைக்கிறோம் என்பதைப் பாருங்கள்" என்று பெரும் 'எடுப்புக்கதைகள்' சொல்லியபடியேதான் மைத்திரி–ரணில் கூட்டணி ஆட்சியைப் பிடித்தது. சொன்னது போலவே சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கவும் செய்தார்கள். ஆனால், அப்படிக் குறைத்த விலைகளைக் காலப்போக்கில் முன்னர் இருந்ததை விடவும் பலமடங்கு அதிகரிக்கவும் செய்துவிட்டார்கள். சில பொருட்களின் விலையைக் குறைக்கும் போது, பெரும் எடுப்பில் அதைப் பட்டி தொட்டியெல்லாம் பறைசாற்றிய அரசாங்கம், அந்தப் பொருட்களின் விலைகளை உயர்த்தும் போது மட்டும் ஊமையாகி விடுகின்றது.

எரிவாயு, வெங்காயம், கிழங்கு என்று இப்போது பால்மாவும் விலையேறிவிட்டது. உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக வெளிநாட்டில் இருந்து பால்மாவை இறக்குமதி செய்வதற்குத் தற்காலிகத் தடையும் போடப்பட்டுள்ளது. ஆனால் பிரச்சினை என்னவெனில், உள்ளூரில் உற்பத்தியாகும் பால், இலங்கையர்களின் தேவையின் ஒரு குறித்த பகுதியை மாத்திரமே பூர்த்தி செய்யமுடியும். அதனால் முன்னரை விடவும் பால்மாவுக்காக கேள்வி சந்தையில் அதிகரிக்க, அதன் விலை இன்னும் உயரும். இப்படி ஒவ்வொரு பொருளாக விலையை ஏற்றிவரும் அரசு அடுத்துக் கண் வைத்துள்ள பொருள், எரிபொருள் தான். உலகச் சந்தையில் எரிவாயு விலை குறைந்திருந்தபோதே, முன்னரைக் காட்டிலும் அங்கு விலையேறிவிட்டதாக ஒரு 'புளுடா' விட்டு அதன் விலையை ஏற்றிய அரசுக்கு, மசகு எண்ணெயின் விலையும் உலகச் சந்தையில் ஏறிவிட்டதாகச் சொல்லி, அதன் விலையையும் உயர்த்தினால், நாமென்ன உலகச் சந்தைக்குச் சென்று, ஒரு பரல் மசகு எண்ணெய் என்ன விலை?" என்று விசாரிக்கவா போகின்றோம்.

இருப்பினும் மக்களின் வயிற்றில் கைவைக்கு அரசுகள் அதிக நாட்கள் ஆட்சியில் நீடித்ததில்லை. அது மைத்திரிக்கும், ரணிலுக்கும் நன்கு தெரிந்தும் ஏன் இப்படி பேயாட்சி செய்கிறார்கள் என்பது மக்களுக்கு இன்னும் புரியவேயில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# உலக மலேரியா தினத்தை முன்னிட்டு யாழில் விழிப்புணர்வு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,மே 05

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு வட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் யாழ்ப்பாண நகரில் நேற்று சிறப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலேரியா தொடர்பான விழிப்புணர்வு வீதிநாடக ஆற்றுகையும் அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வு பேரணியும் இடம்பெற்றது.

இந்தப் பேரணியை யாழ்ப்பாண பிரதேச செயலர் தயானந்தன் ஆரம்பித்து வைத்தார். யாழ் தனியார் பேருந்து நிலையத்தில் ஆரம்பமான



பேரணி யாழ் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையில் நிறைவு பெற்றது.

இதன்போது மலேரியா நோயை மீண்டும் பரவ விடாமல் செய்யும் பொருட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு சென்று வருபவர்கள் மலேரியா தொற்றுத் தொடர்பில் அவதானமாகவும் விழிப்புணர்வுடனும் இருப்பது அவசியம் என இங்கு வலியுறுத்தப் பட்டது.

இந்த நிகழ்வில் பிராந்திய மலேரியா தடை இயக்க பணிப்பாளர் மருத் துவர் திருமதி மரியா செல்வநாயகம் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார் மற்றும் சுகாதார பணியாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தேசிய மரநடுகை மாதத்தில் மாநகரை பசுமைப்படுத்த திட்டம்

யாழ்ப்பாணம்,மே.05

தேசிய மரம் நடுகை மாதத்தில் யாழ்ப்பாண மாநகரை பசுமைப் படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தலைமையில் நேற்று ஆராயப் பட்டது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி தேசிய மரம் நடுகை ஆரம்பமாகும். அன்றைய தினத்தில் பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்களை நடுவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்காக நேற்றைய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் வடமாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட், மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து உள்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், வனவளத்திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் சாரணர், லயன்ஸ் கழகங்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட், விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஆகியோருடன் இணைந்து ஆளுநர் செயலகம் உட்பட மாகாணத்தின் அனைத்து திணைக்களங்களின் பங்களிப்புடன் யாழ்ப்பாண மாநகரை பசுமைப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார் என்றுள்ளது.

## அதிக வறுமை கொண்ட மாவட்டமாக கண்டி

கொழும்பு,மே05

மத்திய வங்கி அண்மையில் வெளியிட்ட தகவலின்படி வறுமையான மக்கள் அதிகளவில் உள்ள மாவட்டமாக கண்டியும் குறைந்தளவு வறுமை கொண்ட மக்கள் கொண்ட மாவட்டமாக மன்னாரும் இனம் காணப்பட்டுள்ளன.

எனினும் இந்த அறிக்கையில் புள்ளி விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

புள்ளிவிபர கணக்கெடுப்பு தகவலின் படி உணவு மற்றும் பிற பொருள் கொள்வனவை அடிப்படையாக வைத்தே இந்த விபரம் கணிக்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவர் 4116 ரூபா அல்லது நாளொன்றுக்கு 139 ரூபாவை உணவு மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளுக்காக செலவழிக்கவேண்டும்.

எனினும் மக்கள் தொகை விகிதாசார கணக்கெடுப்பின்படி கிளிநொச்சியில் வறுமை நிலை 18.2 வீதமாகவும் கொழும்பில் 0.9 வீதமாகவும் காணப்பட்டது.

## தொடர்ச்சிகள்

### ஆட்சிக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடையாக உள்ளார். அத்துடன் தற்போதைய அரசில் காணப்படும் குறைபாடுகளை களையாவிட்டால் மகிந்த மீளவும் ஆட்சி பீடமேறுவது உறுதி என அமைச்சர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலைமைக்கு நாட்டு தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும். தேசிய அரசாங்கம் 2015ஆம் ஆண்டு முன்வைத்த வாக்குறுதிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தேசிய அரசாங்கம் 2020ஆம் ஆண்டு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தேசிய அரசாங்கத்தில் இடம்பெற்ற 10 பில்லியன் பிணைமுறி மோசடியினை வைத்துக் கொண்டு கடந்த காலத்தில் இடம்பெற்ற பல ஊழல் மோடிகளை எதிரணியினர் மூடி மறைக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தார் தேசிய நிதியினை பல வழிமுறைகளில் மோசடி செய்தனர். இதற்கான ஆதாரங்களும் சட்டபூர்வமாக உறுதியாக்கப்பட்டுள்ளது. நாட்டில் சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே காணப்பட வேண்டும்.ஆனால் மஹிந்த மற்றும் அவரது குடும்பத்தாரின் விவகாரத்திலும் சட்டம் தொடர்ந்தும் மந்தகரமாகவே செயற்பட்டு வருகின்றது. எனினும் இவர்களுக்கு எதிராக அனைத்து சாட்சியங்களும் உறுதியாகவே காணப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமைத்துவத்தில் உள்ள தேசிய அரசாங்கம் தற்போது காணப்படுகின்ற குறைபாடுகளை 2020ஆம் ஆண்டுக்குள் விரைவாக நிவர்த்தி செய்ய வேண்டும் அவ்வாறு இல்லாவிடின் மீண்டும் குடும்ப ஆட்சி தோற்றம் பெறும். நாடாளுமன்ற தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானால் 18ஆவது அரசியல் திருத்தத்தினை தனக்கு சாதகமாக கொண்டு வந்ததை போன்று 19ஆவது அரசியல் திருத்தத்தினை இரத்து செய்து தமக்கு சாதகமான முறையில் புதிய அரசியல் திருத்தத்தினை ஏற்படுத்தி மீண்டும் ஜனாதிபதியாகி விடுவார் - என்றார்.

### அஸ்மினுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் அயூப் அஸ்மின் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவாந்துறை நான்கு சந்தியிலுள்ள ஜிம்மா பள்ளி வாசலில் இடம்பெற்ற மதியநேர ஜிம்மா தொழுகையின் பின்னர் பள்ளிவாசலுக்கு முன்பாக ஒன்றுகூடிய இவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்-

இந்த விடயத்தில் தனது சொந்த மதத்தை மதிக்காமல் அஸ்மின் தெரிவித்துவரும் கருத்துக்களை அவர் நிறுத்திக் கொள்வதுடன் இதற்காக அவர் பொதுவெளியில் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். அத்துடன் அயூப் அஸ்மினுடைய உருவ பொம்மையையும் தீயிட்டு கொழுத்தி எதிர்ப்பை வெளியிட்டனர்.

### அதிபர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் அதிபர் மீது கடமை நேரத்தில் பாடசாலை அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த அதேபாடசாலையில்கல்வி கற்பிக்கின்ற ஆசிரியை ஒருவரின் கணவரே இவ்வாறு அதிபரைத் தாக்கியதாக கிளிநொச்சிப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளானஅதிபர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதிபரை தாக்கிய நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.எனினும் குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே தாக்குதலை நடத்திய நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி மாணவர்களும்பெற்றோர்களும் பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## இன்று நாளும் கோளும்

05.05.2018 சனிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 22 ஆம் நாள்
சதுர்த்தி மு.ப. 11.17 வரை | மூலம் மு.ப. 10.38 வரை | குளிகை மு.ப. 07.30-09.00
இராகுகாலம் 10.30- 12.00 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுகம் | நற்செயல் | வெற்றி | நன்மை | சிக்கல் | இலாபம் | ஆதரவு | தேர்ச்சி | வீம்பு | தெளிவு | தனம் | இன்பம் |

# பங்களாதேஷ் நீதிபதிகளுடன் தலதா அதுகோரல சந்திப்பு



கொழும்பு , மே 05

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரலவுக்கும், பங்களாதேஷ் நீதிபதிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இரு நாட்டுச் சட்டக் கட்டமைப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, நீதிமன்றப் பணிகளை மேம்படுத்துவது தொடர்பில் இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரல வேண்டுகோள் விடுத்தார். (ஆ)

# மாரவில பகுதியில் 36 சாரதிகள் கைது

மாராவில, மே 05

மாராவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், நேற்றுமுன் தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையின் போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய, 36 வாகனச் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாராவில பொலிஸ் நிலைய வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்தனர்.

அதி வேகத்தில் வாகனத்தைச் செலுத்திச்சென்றமை, வீதி சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாது பயணித்தமை, காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனத்தைச் செலுத்தியமை, தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணித்தமை மற்றும் போதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஆ)



# கண்டியில் சடலம் மீட்பு

கண்டி, மே 05

கண்டி நீதிமன்றக் கட்டட வளாகத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் சடலம் ஒன்று நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய நபர் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் வீட்டுக்குச் செல்லும் வழியில், தெஹியானோவில மேத எலன பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற பாலத்தில் இருந்து விழுந்து உயிரிழந்திருக்கக்கூடும் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகை அதிகரிப்பு

கொழும்பு, மே 05

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கும் கடன் தொகையின் அளவு இந்த வருடம் 600 - 800 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்கப்பட உள்ளது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிம் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 51 ஆவது ஆளுநர் சபைக் கூட்டம் மற்றும் தெற்காசியப் பிராந்திய ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் மணிலாவில் அமைந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைமையகத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஒதுக்குகை மூலம் அனுகூலம் பெறும் நாடாக இலங்கை உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு ஒதுக்கப்படும் கடனின் சராசரி அளவு கடந்த வருடம் 300 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. இந்த வருடம் அந்தத் தொகை அதிகரிக்கப்பட உள்ளது. சராசரியாக 20 மில்லியன் சனத்தொகை கொண்ட ஒரு நாட்டுக்கு இது மிகப் பெரிய தொகை ஆகும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மஹிந்தானந்த, ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்குகள் ஒத்திவைப்பு



கொழும்பு, மே 05

இலங்கை சுதந்திரத் தொழிலாளர் காங்கிரஸுக்குச் சொந்தமான 35 இலட்சம் ரூபா பணத்தைத் தவறான முறையில் கையகப்படுத்திய குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு , மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன, நேற்று ஒத்திவைத்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில், தமது சொத்து விவரங்களைக் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சமர்ப்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து, கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார நேற்று உத்தரவிட்டார். (ஆ)

# சீனத் தூதுவர்கள் இலங்கை வருகை





கொழும்பு , மே 05

புதிதாக நியமிக்கப்பட்ட சீனப் பிரதிநிதித் தூதுவரான செங் சுவேன் உட்பட சீனப் பிரதிநிதிக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்காவை இராணுவத் தலைமையகத்தில் வைத்துச் சந்தித்தனர்.

இதன்போது, நாட்டின் நலனுக்காக இலங்கை இராணுவம் செய்த சாதனைகள் மற்றும் பங்களிப்புகளுக்கு சீனத் தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையின் இராணுவ ஒத்துழைப்பு, மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் நல்லெண்ணப் புரிந்துணர்வுடன் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன. (ஆ)

# வர்த்தக கருத்தரங்கு

கொழும்பு , மே 05

இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 'எதிர்கால வர்த்தக நடவடிக்கை' என்ற தலைப்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட உள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, அவர்களது தயாரிப்புக்களை சர்வதேச சந்தையில் பிரபல்யப்படுத்துவதே இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும். (ஆ)

# தங்கக் கட்டிகளுடன் 4 இந்தியர்கள் கைது

கொழும்பு, மே 05

இலங்கைக்குள் சட்டவிரோதமான முறையில் தங்கக் கட்டிகளை மறைத்து எடுத்து வர முயன்ற நான்கு இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் இருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்த விமானத்தில் வருகை தந்திருந்த குறித்த நான்கு பேரும், தங்கள் காற்சட்டைப் பைகளுக்குள் தங்கக் கட்டிகளை மறைத்து வைத்துள்ளனர். இதன்போது, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இவர்களிடம் சோதனை நடத்தினர். அப்போது, ஒரு கிலோ கிராம் அளவிலான எட்டு தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி ஒரு கோடியே 13 இலட்சத்து 72 ஆயிரத்து 270 ரூபா என்று [illegible] (அ)

# சவுதி சுற்றுலா பயணிகளுக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டம்

கொழும்பு , மே 05

சவுதி அரேபியாவில் இருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்காக விசேட சுற்றுலா ஊக்குவிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்[illegible] ரியாத் சுற்றுலா கண்காட்சிக் கூடத்தில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அலுவலகம் இதனை ஆரம்பித்துள்ளது.

சவுதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் ஏ.காஸிமின் தலைமையில் 35 பேர் [illegible] கலந்து கொண்டுள்ளது.

நாட்டின் முன்னணி 15 சுற்றுலா நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

# வடக்கு - தெற்கை இணைக்க கிழக்கிலிருந்து நெடுஞ்சாலை

## வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்



பத்தரமுல்லை, மே 05

கிழக்கு மாகாணத்தில் இருந்து வடக்கையும், தெற்கையும் இணைக்கும் வகையில் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்று நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சில் வைத்து, தனது உத்தியோகப்பூர்வக் கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர், அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

"கிழக்கு மாகாணத்தில் இதுவரை நெடுஞ்சாலைகள் அமைக்கப்படவில்லை. கிழக்கையும்- தெற்கையும், கிழக்கையும் -வடக்கையும் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்குத் தேவையான நிதியைச் சர்வதேசத்தின் உதவியோடு பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் என்னை நியமித்துள்ளனர். வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 40 வீதமான நிதி இந்த அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், நாட்டின் அபிவிருத்தியுடன் தொடர்பு பட்ட அமைச்சு என்பதால் இதன் ஊடாக கிழக்கு மாகாண அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்த உள்ளேன். " என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# 53 இலங்கைப் பெண்களை திருப்பி அனுப்பிய லெபனான்

கொழும்பு, மே 05

லெபனானில் விசா இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண்கள் 53 பேரை , அந்த நாட்டு அரசாங்கம் திருப்பி அனுப்பி உள்ளது.

அந்த நாட்டில் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

53 பெண்களும் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வீட்டுப் பணிப்பெண்களாகப் பணியாற்ற லெபனான் சென்றிருந்த இவர்கள் முறையான விசா இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் , அந்த நாட்டு அரசாங்கம் வழங்கிய பொது மன்னிப்புக் காலத்தை உபயோகப்படுத்தி, லெபனானுக்கான இலங்கை தூதுவர் எடுத்த முயற்சியால் இவர்கள் மீண்டும் தாய் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பொலிஸ் அத்தியட்சகர் 18 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, மே 05

பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 18 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரது உத்தரவு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கமைய, இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஆ)

# 10 பல்கலை மாணவர்கள் பிணையில் விடுதலை

கொழும்பு,மே 05

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குள் அத்துமீறி உள் நுழைய முயன்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கடந்த 26 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழகப் பிக்குகள் ஒன்றியத்தின் பிக்கு மாணவர் உட்பட 10 மாணவர்களைப் பிணையில் செல்லக் கோட்டை பிரதான நீதிவான் லால் ரணசிங்க அனுமதி வழங்கி உள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், கோட்டை பிரதான நீதிவான் முன்னிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, இதன்போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு முன்பாக கடந்த மாதம் 26 ஆம் திகதி பல்கலைக்கழகங்களில் 2016 மற்றும்2017 ஆம்கல்வி ஆண்டுக்காக பௌத்த சமயம் மற்றும் ஆய்வுத்துறைக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவதை இடைநிறுத்தியுள்ளமையைக் கண்டித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவப் பிக்குகள் சம்மேளனத்தால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, குறித்த மாணவர்கள்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குள் அத்துமீறி உள்நுழைய முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கறுவாத் தோட்ட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)







தேசிய வீட்டமைப்பு அதிகாரசபையால், கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடுப்பிட்டி வடக்குத 353 கிராமசேவையாளர் பிரிவில், நடைமுறைப்படுத்தப்பட்ட மானிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக இரண்டு பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் ரஜீவ், வடமராட்சித் தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் வே.ஐங்கரன், யாழ். மாவட்ட வீட்டுத்திட்ட முகாமையாளர் ரவீந்திரன், உடுப்பிட்டி வடக்கு கிராமசேவையாளர் யோ.சுஜீந்திரன்ஆகியோர் கலந்து கொண்டனர் (ஆ-11)



## தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் எண்ட மாதிரியோ?

ஊருலகத்திலை என்ன நடக்கிதெண்டு கேக்கிறன்? அவனவன் கண்நிண்டமாதிரி எல்லாம் நடக்கிறான். அதுக்கு பொலிஸ்காரரும் உடந்தை போல கிடக்கிது!

திருகோணமலையிலை தன்ரை பெண்சாதியை அபாயா போட விடேல்லை எண்ட கோபத்திலை நானா போய் அந்தப் பள்ளிக்கூட பிரின்சிப்பலை வெருட்டிறார். என்ரை பெண்சாதியோடை கனக்கக் கதைச்சால் பிரச்சினைவரும். அதாலை வாயைப் போத்தெண்டு சொல்லுறார். சரி அது போகட்டே!

இப்ப பாத்தால் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலை, அதுகும் கடமை நேரம் பள்ளிக்கூடத்திலை வேலை பாத்துக் கொண்டிருந்த பிரின்சிப்பலைப் போய் வெருட்டி அடிச்சுக் காயப்படுத்தி இருக்கிறார் ஒரு ஆசிரியையின்ரை புருசன். அப்ப எல்லாம் ரீச்சர்மாரும் இப்ப தங்கடை புருசன்மாரை விட்டு ஆக்களை வெருட்டத்துவங்கிவிட்டினமோ?. முந்தின காலம் எண்டால் ஆம்பிளையள் உப்பிடியேன் பிரச்சினை வந்திட்டு எண்டால், முதலிலை அவளவையைத்தான் விசாரிப்பினம். பிறகு போய்த்தான் சரி பிழையை அடுத்தாக்களோடை கதைக்கிறது. இது என்னெண்டால், முன்பின் யோசியாமை அவளவை ஏவிவிட்ட உடனை போய் கொளுத்தாடு பிடிக்க வெளிக்கிடுறது.

ஒரு பாடசாலை அதிபர் தாக்கப்படுற விசியம் சரியான பாதூரமானதெண்டு கிளிநொச்சிக் கல்வி வலயப் பொறுப்பாளர் ஜோன் குயின்ரஸ் சொல்லி இருக்கிறார். எனக்கு ஜோன் குயின்ரஸ்ஸைத் தெரியும். அவர் ஒரு நீதியான ஆள். மனுசன் சரியானதைச் சரி எண்ணும். பிழை எண்டால் பிழை எண்ணும். இப்ப அந்தாளும் சேந்து போய்த்தான் பொலிஸிலை முறைப்பாடு செய்திருக்கு. காயப்பட்ட பிரின்சிப்பலை ஆக்கள் ஆஸ்பத்திரியிலையும் சேத்திருக்கினமாம்.

பள்ளிக்குடத்து பெடி பெட்டையளும், அவையின்ரை தாய் தேப்பனும் குழம்பியிருக்கினமாம். அவையள் குழம்பிவினந்தானே? அவையள் ஆர்ப்பாட்டமும் செய்தவையாம். உப்பிடியான அடாவடித்தனத்தை சும்மா விடப்பிடாது. பிரின்சிப்பல் பிழை எண்டால் போய் வலயக் கல்வி அதிகாரியிட்டை முறையிடுங்கோ. அவரும் கேக்காட்டிப் போய் பொலிஸிலை முறைப்பாடு குடுங்கோ. இணக்கசபை இருக்கு. ஆளைக் கோட்டுக்கு இழுங்கோ. அதுதான் முறை. அதைவிட்டிட்டு எந்தக் கொம்பன் எண்டாலும் கை வைக்கேலாது. நான் நினைக்கிறன் எவனாவது அரசியல்வாதியின்ரை ஆளாத்தான் உவர் இருப்பர். அவைதான் முன்பின் யோசியாமல் கைவைக்கிறது. ஏனெண்டால் அரசியலை வைச்சுக் கொண்டு எல்லாரையும் ஆட்டிப்படைக்கலாம் எண்டு அவையள் நினைக்கிறவை.

அடிச்சவன் பிரின்சிப்பலை அடிச்சுப்போட்டுப் போய் வலயக் கல்வித் திணைக்களத்திற்கு முறையிடப் போய் இருக்கிறார். அவரை உடனை பொலிஸுக்கப் போகச் சொல்லிப் போட்டு அங்கை போய்த்தானாம் அவரை அடையாளங்காட்டிக் கைது செய்திருக்கினம்.

பிறகு ஏதோ தில்லுமுல்லுப் பண்ணி அவரையும் கொண்டு போய் ஆஸ்பத்திரியிலை போட்டிருக்காம். இப்ப அடிச்சவரும் ஆஸ்பத்திரியிலை. அடி வாங்கினவரும் ஆஸ்பத்திரியிலை. எப்பிடி விளையாட்டு. இததான் அண்ணை சரியான சனநாயகம் எண்டு, சொல்லிச் சிரிக்கிறான் முதலி. பொலிஸ் நினைக்குதாம் இது ஒரு சின்னப் பிரச்சினைதானே சமாதானமாப் போனால் என்ன எண்டு. குழந்தைப் பிள்ளையள்மாதிரிப் பெருசு படுத்திக் கொண்டு......

என்னண்டாலும் பள்ளிக்கூடத்திலை அடாவடித்தனம் நடக்க விடக்குடாது. அநியாயம் நடக்கிதோ? போய் முறைப்பாடுபோடுங்கோவன். சட்டத்தாலை அலுவலைப் பாககப் பழகுங்கோ. அந்தச் சட்டத்தை நீங்கள் உங்கள் கையிலை எடுக்க விடாதையுங்கோ. அது அண்டு சந்திச் சண்டியன்மார் செய்த விளையாட்டு. உப்பிடி எல்லாரும் தங்கடை பிரச்சினையைத் தாங்கள் தீர்க்க வெளிக்கிட்டாக் கோடு என்னத்துக்கு? பொலிஸ் என்னத்துக்கு? விதானை என்னத்துக்கு? இணக்கசபை என்னத்துக்கு? எல்லாத்தையும் நீங்கள், நீங்கள் செய்திட்டுப் போங்கோவன்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவது போன்ற நடவடிக்கைகளால் மக்களைத் தம்பால் திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது ஒரு ஆபத்தான நடவடிக்கை. தந்து தந்து எம்மைத் தம்பால் ஈர்த்து வருகின்றார்கள். இதற்கு அவர்கள் எதிர்பார்க்கும் "விலை" தம்மைத் தொடர்ந்து இங்கிருக்க, எம் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதே. மேலும் பௌத்தத்தைப் பரப்புவதிலும் கண்ணுங் கருத்துமாக உள்ளார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரின் வாராந்த கேள்வி பதில் அறிக்கையிலேயே இந்த விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் காரணங்கள் எதுவும் தற்போது இல்லாததால் இராணுவத்தினர் தொடர்ந்து வடகிழக்கில் குடியிருந்து வரவேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் இராணுவக் கண்காணிப்பு செய்வதற்கு பயன்தரக்கூடிய காணிகளை ஏக்கர் ஏக்கராய் வைத்திருக்கத் தேவையில்லை. ஒரு அறையினுள்ளே இருந்து நவீன கருவிகளைப் பாவித்து கண்காணிப்பில் ஈடுபடலாம் .

தற்போது ஜனநாயக சூழல் பிறந்துள்ளது.இவ்வாறான ஜனநாயக சூழலை ஏற்படுத்தாது இருக்கவே முன்னைய அரசு கோத்தாபயவின் கீழ் ஒரு வல்லாட்சியை முடுக்கி விட்டிருந்தது. வெருட்டி ஆள்வதை அவ் வல்லாட்சி தனது குறிக்கோளாக வைத்திருந்தது.

இன்று ஜனநாயகம் பிறக்கக் காரணம் வெளிப்படையாக ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் சில நாடுகளே பின்னிருந்து இன்றைய கூட்டு அரசைப் பதவிக்கு வர உதவி புரிந்தமையே. தமிழ் பேசும் மக்களும் எமது பெரும்பான்மையான வாக்குகளை அளித்தே இந்த ஜனநாயக அரசை பதவிக்குக் கொண்டுவந்தோம்.

அரசு என்ன நினைக்கும் இராணுவம் என்ன நினைக்கும் என்பது பிழையான சிந்தனை. அரசு என்ன செய்ய வேண்டும், இராணுவம் என்ன செய்ய வேண்டும் என்பவற்றை அரசுக்கும் இராணுவத்துக்கும் எடுத்துக்கூறுவதே எமது கடமை.

அவருக்குப் பயந்து இவருக்குப் பயந்து நாங்கள் எமது மனோநிலையை அவர்களுக்கு எடுத்துக் கூறாமல் இருந்தோமானால் ஏன் என்று கேட்க முதலே வடக்கு கிழக்காய் மாறிவிடும்..

இராணுவம் சுமார் 60 ஆயிரம் ஏக்கர் காணியை வடமாகாணத்தில் பிடித்து இன்றுந் தன் கை வசம் வைத்திருக்கின்றது. கேட்டால் அவ்வளவு இல்லை என்கிறார்கள். புள்ளி விவரங்கள் ஒருவர்க்கொருவர் மாறுபடுகின்றன.

இதுவரை சிறிது சிறிதாகத் திருப்பிக் கையளித்து வருங் காணிகள் தனியாருக்குச் சொந்தமான காணிகளே. இவற்றை விட பண்ணைகள், அரச கட்டடங்கள், சனசமூக நிலையங்கள், அரச காணிகள், காடுகள் போன்ற பலவற்றையும் பிடித்து வைத்துள்ளார்கள் படையினர்.

காட்டுப்பாங்கான பிரதேசங்களில் எமது வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. விலையுயர்ந்த மரங்கள் தறிக்கப்படுகின்றன. அவை போகுமிடம் யாரும் அறியார். இத்தனைக்கும் ஆயிரக் கணக்கான போர் வீரர்கள் வன்னியில் குடிகொண்டுள்ளனர்.

கொழும்பில் வழங்கும் அனுமதிப் பத்திரங்கள் குறிப்பிடும் அளவுக்கு அதிகமாக கருங்கற்கள் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன. இவை இராணுவ அனுசரணையுடன் நடக்கின்றன என்பதற்கு அத்தாட்சிகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இங்குள்ள பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி இடங்கள் தெற்கிலிருந்து வந்தவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய மீனவர்கள் வாழ்வாதாரம் இல்லாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏ9 தெருக் கடைகள் வைத்திருப்போர் பலர் இராணுவத்தினரின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் அல்லது உளவாளிகள். இராணுவம் பெருமளவில் காட்டுப் பிரதேசங்களில் கையகப்படுத்தி வைத்திருக்குங் காணிகளைச் சென்று பார்க்க முடியாது. திருமுருகண்டி ஒரு நல்ல உதாரணம்.

சுமார் ஆயிரத்து 702 ஏக்கர் காணியை இராணுவம் அங்கு வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அங்கு நாங்கள் எவரும் போகமுடியாது.

பாதுகாப்புக்காக இராணுவம் வடமாகாணத்தில் தரித்து வைக்கப்பட்டிருக்கின்றது என்பதிலும் பார்க்க வணிக நோக்குடன் இராணுவம் இயங்குகின்றது என்பதே உண்மை.

இராணுவம் மட்டுமல்ல. கடற்படை, விமானப்படைகளும் இவ்வாறான வணிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

உதாரணத்துக்கு வடமாகாணத்தில் தல்செவண என்ற விடுமுறை தங்குமிடம் காங்கேசன்துறைக் கடற்கரையை அடுத்த ஒரு சொகுசு சுற்றுலாப் புகலிடம். 2010 ஒக்டோபரில் திறக்கப்பட்டு இன்று வரையில் நடைமுறையில் இருக்கும் தல்செவணவை அண்டிய பல ஏக்கர் கடற்கரைக் காணிகள் படையினர் வசமே உண்டு.

தல்செவணவை யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமைக் காரியாலயமே நடத்துவதாகக் கேள்வி. அது யாருக்குரியது, சட்டப்படி யார் நடத்துகின்றார்கள் என்பது போன்ற விவரங்கள் மர்மமாகவே உள்ளன.

மேலும் சுண்டிக்குளம் இயற்கைப் பூங்கா விடுமுறைத் தங்குமிடமானது பறவைகள் சரணாலயத்திற்கு 2012ல் அமைக்கப்பட்டு அதனை இராணுவத்தினரே நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த விடுமுறைத் தங்குமிடத்தையும் நடத்தும் இராணுவப் பிரிவு எது என்பதில் தெளிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

வெளிப்படைத் தன்மையில்லாமலே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் 180 ஏக்கர் காணி கொண்ட பலால பண்ணையில் தூவு நீர் வசதிகளுடன் இராணுவத்தினரால் பயிர்ச் செய்கைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. வவுனியா மெனிக் பண்ணையும் நெல், மரக்கறி பயிர்ச்செய்கைக்குப் பாவிக்கப்பட்டு வருகின்றது.

எமது சுற்றுலாவுக்குப் பயன்படக்கூடிய பல இடங்களை கடற்படையினர் தம் கைவசம் வைத்துள்ளனர்.

ஆகாயப்படை ஹெலிடுவர்ஸ் என்ற விமான சேவையை நடாத்தி வருகின்றது.

படையினர் மக்களின் வாழ்வாதாரங்களைத் தாமே சுவீகரித்துள்ளார்கள். இராணுவத்தினரின் வணிக நடவடிக்கைகள் பொதுவான சட்ட திட்டங்களுக்கு அமைய நடப்பதில்லை.

அண்மைக் காலத்தில் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை தந்திரோபாயமாக முன்னெடுத்து வருகின்றார்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பது, கிணறு வெட்டிக் கொடுப்பது, குளங்கள், கடலோரங்கள் போன்றவற்றை சுத்தப்படுத்திக் கொடுத்தல், வாழ்வாதாரங்கள் கொடுத்தல், வெசாக் பண்டிகை போன்ற தினங்களில் கௌதமரின் பெயரைச் சொல்லி களியாட்டங்களையும், உணவகங்களையும் நடாத்துவது போன்ற நடவடிக்கைகளால் மக்களைத் தம்பால் திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இது ஒரு ஆபத்தான நடவடிக்கை. தந்து தந்து எம்மைத் தம்பால் ஈர்த்து வருகின்றார்கள். இதற்கு அவர்கள் எதிர்பார்க்கும் "விலை" தம்மைத் தொடர்ந்து இங்கிருக்க எம் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதே. மேலும் பௌத்தத்தைப் பரப்புவதிலும் கண்ணுங் கருத்துமாக உள்ளார்கள் என தெரிவித்துள்ளார்.

## வவுனியா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது கைகளை உயர்த்தி நீதிபதியிடம் சில விடயங்களை தெரிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதன் போது கடமையில் இருந்த பதில் நீதிவான் கைதிக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கினார்..

இதன் போது வவுனியா சிறைச்சாலையில் கைதிகளுக்கு பல்வேறான அநீதிகள் இடம்பெறுவதாகவும் கைதிகள் நல்ல இடத்தில் உறங்குவதற்கு சுமார் 3000 ரூபாய் வரை பெறப்படுவதாகவும் அப்பணம் வழங்கப்படாவிட்டால் மலசல கூட பகுதியிலேயே தங்கவிடப்படுவதாக தெரிவித்ததோடு சிறைச்சாலைக்குள் புகையிலை போதைப் பொருள் பாவனையும் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாட்டுக்கு சிறைக்காவலர்களும் நீண்ட நாள் கைதிகளாக இருப்பவர்களும் இணைந்தே செயற்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதன் போது அனைத்து சட்டத்தரணிகளும் எழுந்து குறித்த கைதி சுட்டிக்காட்டும் பிரச்சினை சிறைச்சாலையில் இடம்பெறுவதாக தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பதில் நீதவான் வவுனியா சிறைச்சாலை பொறுப்பதிகாரியை நீதிமன்றத்துக்கு அழைத்து குறித்த கைதி தெரிவித்த கருத்தினை சுட்டிக்காட்டி இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையினை நீதி மன்றத் துக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

## ஆபத்தான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தினர் மக்கள் நல திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் அமைதிப் படையாகவே செயற்படுகின்றனர்.

இவர்கள் கொலை, சுடுதல் உள்ளிட்ட கொடூர யுத்தத்துக்கு எதிரானவர்களாக பரிமாற்றமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது நல்லிணக்க செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றனர். என அவர் தெரிவித்துள்ளார்.

## பால் மா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, சிறுவர்களுக்கான பால்மா விலையில் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

பால்மா விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு வாழ்க்கைச் செலவுக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

## முள்ளிவாய்க்கால் நினை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து ஏனைய சுடர்களை பொது மக்கள் ஏற்றிவைப்பர். இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வழமையாக முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் நிகழ்வு தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வருகை தரும் உறவுகளுக்காக நண்பகலுக்கு மாற்றப் பட்டுள்ளது என்று ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுமாலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெறவிருக்கும் தமிழர் இனவழிப்பு நாள் நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அன்றையநாள் மக்கள் வருகை தருவார்கள். வருகை தரும் மக்களில் முதியோர், தாய்மார்கள், கைக்குழந்தைகள், மதகுருமார்கள், அவயங்களை இழந்த முன்னாள் போராளிகள், அரசியல் பிரமுகர்கள் போன்றோருக்கு ஒதுக்கப்பட்ட நினைவிடத்திலிருந்து குறிப்பிட்டளவு தூரமுள்ள சுற்றுவட்டாரத்தில் பந்தல்கள் அமைக்கப்பட்டு கதிரைகள் போடப்பட்டிருக்கும் மற்றும் குடிதண்ணீர் வசதிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

இதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர், இளைஞர் கழகங்கள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோர் இணைந்து மேற்கொள்வார்கள்.

காலையிலிருந்து தமிழர் இனவழிப்பு நினைவுநாள் தொடர்பான ஒலிபரப்புகள் நிகழ்விடத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

மதியம் சரியாக 12.30 மணிக்கு நிகழ்விடத்திலுள்ள பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அதனை தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய சுடர்களை முள்ளிவாய்க்காலில் வலி சுமந்த உறவுகளோடு இணைந்து பொதுமக்கள், மாணவர்கள் இளைஞர்கள் அரசியற் பிரமுகர்கள் என ஏனையோர் ஏற்றுவார்கள்.

அதைத் தொடர்ந்து நிகழ்விடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தி உறவுகளை நினைவு கூரல் இடம்பெறும் சுடரேற்றத் தொடங்கும்போது ஒலிக்கத்தொடங்கும் 'தமிழர் இனவழிப்பு நினைவு இசை' நிறைவடையும்வரை மக்கள் சுடர்களின் முன்னால் நின்றவண்ணம் இதுவரை காலமும் தமிழினம் மீது நிகழ்த்தப்பட்ட அனைத்துக் கொடுமைகளையும், அவலங்களையும் நினைவுகொள்வதோடு படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவார்கள்.

நினைவு இசை நிறைவடைந்ததும், தமிழர் இனவழிப்பு நினைவுநாள் பிரகடனம் வாசிக்கப்பட்டு உறுதியுரையுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

நிகழ்வுகள் யாவும் ஒலிபெருக்கி வழியாக வழிநடத்தப்படும். மேடையோ, அறிவிப்பாளரோ நிகழ்வில் இருக்க மாட்டார்கள். தமிழர் தாயகம் முழுவதையும் ஒன்றிணைத்து நடத்தப்படும் இந்த நிகழ்வை சிறப்புற நடாத்தி முடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். .

நினைவேத்தல் இடம்பெறும் இடத்துக்கு கப்பல் வீதியினூடாக வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. முல்லைத்தீவு பிரதான வீதியின் ஓரங்களில் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் வாகனங்கள் நிறுத்தி வைக்க முடியும் என்பதனையும் அறிய தருகின்றோம் என்றுள்ளது.

## 20 ஆபத்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிபந்தனையுடன் இந்த பிரேரணைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்படவேண்டும் என்பதே கூட்டு எதிரணியின் நிபந்தனையாகும். இது தொடர்பில் கூட்டுஎதிரணியுடன்பேசுவதாகஜே.வி.பிதெரிவித்துள்ளது.

எனினும் இந்த பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பிக்குகள் இது நாட்டை பிரிவினைக்கு இட்டுச் செல்லும். அத்துடன் 13 ஆவது திருத்த சட்டத்தை இல்லாமல் செய்யாமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு முற்பட்டால் நாடு பிரிவுபடுவதனை தடுக்க முடியாது.

சர்வதேச சமூகம் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஏன் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது. எனவே இந்த பிரேரணை நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

அரசாங்கம் புதிய பாதையில் பயணிக்க வேண்டுமாக இருந்தால் பொதுத்தேர்தலை நடத்தி மக்களின் ஆணையை பெறுவதே சிறந்தது எனவும் பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

## முள்ளிவாய்க்காலில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்றுஇடம்பெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

"ஆணைக்குழுவின் சார்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் அனைத்தும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடத்தப்படும். நினைவு தினத்தை தனிப்பட்ட வகையில், தனிக்கட்சிகள் தனியான இடங்களில் நடத்தாது, பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நினைவுகூர முன்வர வேண்டும்.

அரசியல் கட்சிகளின் விமர்சனங்களுக்கும், மாற்றுக்கட்சிகளை நோக்கி முன்வைக்கும் கருத்துக்களுக்கும் அஞ்சலி நிகழ்வில் இடமில்லை. இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருவோர் அமைதியாக அஞ்சலி செலுத்த வேண்டுமென்பதுடன், இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்கள் காரணமாக உரையாற்றுவதற்கு அனுமதிக்க முடியாது. கடந்த காலத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு உரைகள் தடையாக இருந்தன. அரசியலுக்கு அப்பால், உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு 2 நிமிடங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய ஒழுங்கமைப்புக்களைச் செய்து இரண்டொரு நிமிடங்கள் பேச இடமளிக்க முடியும். கட்சி பேதம் கடந்து மனித நேயம் என்ற அடிப்படையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டும்" என தெரிவித்தனர்.

# அணு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறினால் ஆபத்து

## அமெரிக்காவுக்கு ஐ.நா. எச்சரிக்கை


நியூயோர்க், மே 05

ஈரானின் அணு ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகினால் ஆபத்தான காலகட்டத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“இந்த அணு ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தம், ராஜ்ய ரீதியிலான முக்கியமான வெற்றி ஆகும். அதைப் பராமரித்து வர வேண்டும். நல்லதொரு மாற்றத்தை உருவாக்காமல், இந்த ஒப்பந்தத்தை அழித்து விடக்கூடாது.” என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்த காலத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும்




ஜேர்மன் ஆகிய நாடுகளுடன் ஈரான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதத் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. அது ஈரான் அணு ஆயுதத் திட்டங்களை நிறுத்திக்கொள்ளவும், பிரதிபலனாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை மேற்கத்திய நாடுகள் விலக்கிக்கொள்ளவும் வழிவகுத்து உள்ளது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பரிசீலித்து வருகிறார். எதிர்வரும் 12 ஆம் திகதிக்குள் இந்த விடயம் தொடர்பில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

அதற்கு ஏற்ற வகையில், ஈரான் அணு ஆயுத ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டுள்ளது என்பதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகத் தெரிவித்து , இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாஹூ பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

இந்த நிலையில், போர் மூளும் நிலை உருவாகக்கூடும் என்பதையே ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் சூசகமாக எச்சரித்துள்ளார் என சர்வதேச விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ‘சிக்ஸ் பேக்’ நடிகை



சென்னை, மே 05

ஹாலிவுட் முதல் கோலிவுட் வரை பல நடிகர்கள் படத்தின் தேவை கருதியோ அல்லது தங்கள் ஸ்டைல் கருதியோ ‘சிக்ஸ் பேக்’ அவதாரம் எடுப்பார்கள். டாம் க்ரூஸ், அமீர் கான், சூர்யா, விக்ரம், விஜய், ஆர்யா என பல நடிகர்கள் சிக்ஸ் பேக் வைத்துள்ளார்கள். ஆனால் நடிகைகளில் யாரும் இந்த ரிஸ்க் எடுத்ததில்லை.

பிரபல நடிகர்களைப் போலவே தற்போது நடிகை ரித்திகா சிங்கும் தனது உடலமைப்பை சிக்ஸ் பேக் தோற்றத்துக்கு மாற்றியிருக்கிறார். தமிழில் ‘இறுதிச் சுற்று’ படம் மூலம் நாயகியாக அறிமுகமானவர் ரித்திகா சிங். அதனைத் தொடர்ந்து ‘ஆண்டவன் கட்டளை’, ‘சிவலிங்கா’ ஆகிய படங்களில் நடித்தார். தற்போது ‘வணங்காமுடி’ என்ற படத்தில் நடித்து வருகிறார்.

உடலை ஆரோக்கியமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்வதில் ஆர்வமுள்ளவர் ரித்திகா. தற்போது உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க சிக்ஸ் பேக் வைத்திருக்கிறார். இதற்காக தினமும் கடுமையாக உடற்பயிற்சி செய்து வருகிறார். ஜிம் பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடுகளில் கவனம் செலுத்தி வருகிறார் அண்மையில் உடற்பயிற்சி செய்யும் சில புகைப்படங்களைத் தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார் ரித்திகா. அவரது ரசிகர்கள் இதனை வரவேற்றுப் பாராட்டி வருகின்றனர்.

ரித்திகா சிங் நடிக்க வருவதற்கு முன் குத்துச் சண்டை வீராங்கனையாக இருந்தவர். சினிமாவில் நடிக்கத் தொடங்கிய பின்னர் குத்து சண்டை பயிற்சிக்கு நேரமில்லாமல் போனதால் அதற்குப் பிறகு போட்டிகளில் பங்கேற்பதை நிறுத்திவிட்டார். தற்போது அவர் மீண்டும் குத்துச் சண்டையிலும் கவனத்தைச் செலுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ட்ரம்புக்கு அழைப்பாணை?

வொஷிங்டன், மே 05

அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யா தலையிட்ட விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்புக்கு அழைப்பாணை விடுத்து, விசாரணை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவில் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திக்தி ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனைத் தோற்கடித்து, குடியரசுக் கட்சி வேட்பாளராகக் களம் இறங்கிய டொனால்ட் ட்ரம்பை வெற்றி பெறச்செய்வதற்கு, ரஷ்யா நேரடியாகத் தலையிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்தக் குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்தும் மறுத்து வருகிறார். இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றக் குழு விசாரணை நடத்தி வருகிறது. அதே நேரம் ரோபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்புக் குழுவின் விசாரணையும் நடத்தப்படுகிறது.

இந்தக் குழு, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு அழைப்பாணை விடுத்து,விசாரணை நடத்த உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன. இதை, ட்ரம்பின் முன்னாள் சட்டத்தரணி ஜோன் தாவ்த் உறுதி செய்து உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து கொண்டு, ட்ரம்ப் பிரமாண வாக்குமூலம் அளித்து, விசாரணைக் குழுவினரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டிய தர்ம சங்கடமான சூழல் உருவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# சர்ச்சைகளுக்கு மத்தியில் 65 ஆவது தேசிய விருதுகள்

புதுடில்லி, மே 05

65 ஆவது தேசியத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நேற்றுமுன் தினம் இடம் பெற்றது.

65 ஆவது தேசியத் திரைப்பட விருதுகள் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டன. திரைப்பட இயக்குநர் சேகர் கபூர் தலைமையில் தேசிய திரைப்படக் குழுவைச் சேர்ந்த ஆராதனா பிரதான், உஷா கிரன் கான், அனந்த் விஜய் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்து, 2017 ஆம் ஆண்டில் வெளியான திரைப்படங்களுக்கான தேசிய விருதுகளை அறிவித்தனர்.

அதில், தேசிய அளவில் சிறந்த திரைப்படமாக அசாமி மொழியில் வெளியான ‘வில்லேஜ் ரோக்ஸ்டார்ஸ்’ தேர்வானது. சிறந்த தமிழ்த் திரைப்படமாக ‘டு லெட்’ தேர்வாகியது. சிறந்த திரைப்படப் பின்னணி இசை, பாடல் இசை மைப்புக்கான இரு விருதுகளுக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருதுக்கு கே.ஜே. ஜேசுதாஸ் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த நடிகைக்கான தேசிய விருதுக்கு மறைந்த நடிகை ஸ்ரீதேவி தேர்வானார். இந்த முறை தமிழ்த் திரைப்படத் துறைக்கு நான்கு விருதுகள் மட்டுமே கிடைத்தன.

இந்த நிலையில், இந்த விருது விழாவில், குடியரசுத் தலைவர் 11 பேருக்கு மட்டுமே விருது வழங்குவார் என்றும் மீதமுள்ள விருதுகளை மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி வழங்குவார் என்கிற முடிவு, சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்குத் தேசிய விருதுகளை வென்ற கலைஞர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். 65 வருட மரபு மீறப்படுகிறது. தங்களுக்குக் குடியரசுத் தலைவர் விருது வழங்காவிட்டால் விருது வழங்கும் விழாவைப் புறக்கணிப்போம் என்று பலர் அறிவித்தார்கள். இது தொடர்பாக தமிழ் இயக்குநர் செழியன் உள்ளிட்ட 69 திரைக்கலைஞர்களும் திரைப்பட விழாக்களின் இயக்குநர் அலுவலகத்துக்கும், குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதினார்கள்.

அரசின் முடிவை எதிர்த்துப் பல கலைஞர்கள் விருது வழங்கும் விழாவைப் புறக்கணித்தார்கள். இதனால், விழாவைப் புறக்கணித்த கலைஞர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்படவில்லை. எனினும், ஏ.ஆர். ரஹ்மான் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் பங்கேற்றார்கள். (ஆ)

# வட மாநிலங்களில் புயலுடன் மழை

## உயிரிழப்பு 127 ஆக அதிகரிப்பு

புதுடில்லி, மே 05

வட மாநிலங்களை உலுக்கிய புழுதிப் புயல் மற்றும் அடை மழை காரணமாக , உயிரிழ்ந்தோரின் எண்ணிக்கை 127 ஆக உயர்ந்துள்ளது.

ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களை நேற்று முன் தினம் இரவு புழுதிப் புயல் திடீரெனத் தாக்கியது. இதேபோல் பல்வேறு பகுதிகளிலும் கடுமையான இடி மின்னலுடன் மழையும் பெய்தது. இந்தப் புயல் மழை காரணமாக ஏராளமான வீடுகள் தரைமட்டமாகின. மரங்கள் வேருடன் சாய்ந்தன.

முதலில் ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் உயிரிழப்பு அதிகமாக இருந்ததாகத் தகவல் வெளியானது. அண்மைய நிலவரப்படி உத்தரபிரதேசத்தில் 73 பேரும், ராஜஸ்தானில் 39 பேரும், தெலுங்கானாவில் 7 பேரும், உத்தரகாண்டில் 4 பேரும், ஜார்க்கண்ட், பஞ்சாப் மாநிலங்களில் தலா 4 பேரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தென் சீனக்கடலில் ஆயுதங்களை குவிக்கும் சீனா

பீஜிங், மே 05

சர்ச்சைக்குரிய தென் சீனக்கடலில் ஆயுதக் குவிப்பில் சீனா ஈடுபட்டுள்ளது என வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டுள்ளது.


தென்சீனக் கடலின் அடிப்பகுதியில் பெருமளவு எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பதாக நம்பப்படுகிறது. இந்தக் கடல் பகுதியை சீனாவுடன், வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்வான், புருனே உள்ளிட்ட நாடுகளும் உரிமை கொண்டாடுகின்றன. ஆனால், சீனா, அங்கு சர்ச்சைக்குரிய பகுதியில் செயற்கைத் தீவுகளை உருவாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

தென்சீனக் கடல் பகுதி முழுவதும் தங்களுடையதுதான் என சீனா தெரிவித்து வருகிறது. இந்த நிலையில், சர்ச்சைக்குரிய பகுதியில் சீனா திடீரென ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டுள்ளது. தென் சீனக் கடலை ஒட்டியுள்ள பகுதிகளில் சீனா நில இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைத் தளபாடங்களையும், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளையும் நிலை நிறுத்தியிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக, கடந்த 30 நாட்களுக்குள் இந்த ஏவுகணைகள் அடங்கிய கப்பல்கள் ஃபியரி கிராஸ் ரீஃப், சுபி ரீஃப் மற்றும் மிச்சிப் ரீஃப் ஆகிய தீவுகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. தற்போது, அந்தச் செய்திகளை வெள்ளை மாளிகையும் உறுதிப்படுத்தி உள்ளது. தென் சீனக் கடல் சர்வதேச கடல் பகுதி எனவே அங்கு பல நாடுகளின் கப்பல்கள் சுதந்திரமாக சென்று வர உரிமை உள்ளது என அமெரிக்க தெரிவித்து வருகிறது.

தென் சீனக் கடலில் ஆயுதக் குவிப்புத் தொடர்பில் சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹூவா சுன்யிங் "ஸ்பார்ட்லி தீவுகள் என்றழைக்கப்படும் நன்ஷா பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவுகள் அனைத்தும் சீனாவுக்குச் சொந்தமானவை. எனவேதான், ஆயுதத் தளபாடங்களைச் சீனா அங்கே குவித்துள்ளது. தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை நிலை நாட்ட இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது எங்களின் உரிமை. எனவே, இதனை யாரும் கேள்வி கேட்க முடியாது." என அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# இங்கிலாந்து கவுண்டி அணியில் கோலி



மும்பை,மே 05

இங்கிலாந்தின் சர்ரே அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார் கோஹ்லி இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லியை ஜூன் மாதம் முழுவதும் விளையாட இங்கிலாந்தின் சர்ரே அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி இங்கிலாந்து மண்ணில் சரியாக சோபிக்கவில்லை.

வரும் ஜூலை மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை இங்கிலாந்தில் ஐந்து டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள், ரி 20 தொடரில் இந்தியா விளையாட இருக்கிறது. இதில் விராட் கோஹ்லி சிறப்பாக விளையாடுவது மட்டுமல்ல, இந்தியா சிறப்பாக செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதனால் விராட் கோலி தனது திறமையை மேலும் வளர்த்துக் கொள்ள கவுன்டி போட்டியில் விளையாட முடிவு செய்தார். இதற்கு இந்திய கிரிக்கெட் சபையும்ம் பச்சைக் கொடி காட் டியது.

இந்நிலையில் இங் கிலாந்தின் முன்னணி கவுன்டி அணியான சர்ரே விராட் கோஹ்லியை ஒப்பந்தம் செய்துள்ளது. விராட் கோஹ்லி ஜூன் மாதம் முழுவதும் அந்த அணிக்காக விளையாட இருக்கிறார்.

சர்ரே அணி ஹாம்ப் ஷைர் அணியை ஜூன் 9-ம் திகதியும், சோமர் செட் அணியை ஜூன் 20ஆம் திகதியும் எதிர கொள்கிறது. இந்த இரண்டு போட்டியிலும் விராட் கோஹ்லி விளையாடுவார் என திர்பார்க்கப்படுகிறது.



## நம்பமுடியாத அளவுக்கு ஆதரவு

சிட்னி,மே 05

பந்தை சேதப்படுத்திய விவகாரத்திற்குப் பிறகு நம்பமுடியாத அளவுக்கு ஆதரவுக் குரல்கள் வந்தன என ஸ்டீவ் ஸ்மித் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

பந்தைச் சேதப்படுத்திய சர்ச்சையில்-சிக்கி 12 மாதங்கள் தடைபெற்ற அவுஸ்ரேலிய முன்னாள் கப்டன் ஸ்டீவ் ஸ்மித் தற்போது அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பிய நிலையில் இன்ஸ்டாகிராமில் உற்சாக ட்வீட் செய்துள்ளார்.

அதில் "எனக்கு வந்த இ-மெயில்கள், கடிதங்கள், ஆதரவுக் குரல்கள் நம்ப முடியாதவை. இந்த ஆதரவுக் குரல்கள், ஆறுதல்கள் என்னை எளிய மனிதனாக்கி விட்டது. இனி என் தரப்பிலிருந்து உங்கள் நம்பிக்கையைப் பெற நான் கடுமையாக உழைக்க வேண்டும்.

என்னுடைய இந்தக் கடினமான காலகட்டத்தில் என் தாய், தந்தை, மனைவி என்று எனக்கு பாறை போல் தைரியமாக, உறுதுணையாக நின்றனர். உங்களுக்கு என் நன்றிகள் போதாது. உலகில் குடும்பம் மிக முக்கியமானது. உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி" என்று நெகிழ்ச்சியடைந்து குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டது மும்பை



இந்தூர்,மே 05

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் மும்பை அணி 6 விக்கெட்டுக்கால் வெற்றிபெற்றது.

ஐபிஎல் தொடரின் 34-வது லீக் இந்தூரில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோகித் சர்மா பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் லோகேஷ் ராகுல், கிறிஸ் கெய்ல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

இவர்கள் ஆரம்பத்தில் சிறந்த அடித்தளத்தை அமைத்து கொடுத்தபோதிலும் பின்னர் வந்த வீரர்கள் சோபிக்கத் தவறியதால் பஞ்சாப் அணி 20 ஓவர் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப்பெற்றது.

பஞ்சாப் அணி சார்பாக கெய்ல் 50, ராகுல்24, நாயர் 23,ஸ்ரோனிஸ் ஆட்டமிழக்காமல் 15 பந்துகளில்29 ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்து வீச்சில் மக்லினகன்,பும்ரா,பாண்டியா,மார்க்கண்டே,கட்டிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 175 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை அணி யாதவ் 57, இஷான் கிஷான் 25, ஹர்திக் பாண்டியா23, ரோகித்சர்மா ஆட்டமிழக்காமல் 24, குருணல் பாண்டியா ஆட்டமிழக்காமல் 12 பந்துகளில் 31 ஓட்டங்களைப்பெற்று 19 ஓவர்களில் 176 ஓட்டங்களுடன் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக யாதவ் தெரிவானார்.

## இன்று களமிறங்குகிறார் வில்லியர்ஸ்

புனே,மே 05

வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த ஏபி டி வில்லியர்ஸ் உடல்நலம் பெற்றதால், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிராக களமிறங்கவுள்ளார்.

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. புனே அணியில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கெதிராக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி விளையாடுகிறது. இந்த போட்டியில் பங்கேற்பதற்கான உடற்தகுதியை வில்லியர்ஸ் பெற்றுவிட்டார் என்று அந்த அணி தெரிவித்துள்ளது. இதனால் இன்று ஏடி பி வில்லியர்ஸ் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

குயின்டன் டி கொக் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருப்பதால் சொந்த நாடு திரும்புகிறார். இதனால் டி கொக்கிற்குப் பதிலாக டி வில்லியர்ஸ் சேர்க்கப்படலாம். இல்லையெனில் பார்தீவ் பட்டேல் சேர்க்கப்பட்டு மனன் வோரா நீக்கப்படலாம்.

இதுகுறித்து அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளரான டானியல் வெட்டோரி கூறுகையில் "டி வில்லியர்ஸ் உடற்தகுதி பெற்றுவிட்டார். குயின்டன் இந்தப் போட்டியில் விளையாட மாட்டார். குயின்டான் டி கொக் விளையாடாததால் வீரர்கள் தேர்வு எங்களுக்கு எளிதாக இருக் கும்" என்றார்.



## கோலியை பின்பற்றமாட்டேன்



காபூல்,மே05

விராட் கோஹ்லியை விட பெரிய சிக்ஸ் விளாசுகையில், அவரைப் போல் உணவுக் கட்டுப்பாட்டை ஏன் கடைபிடிக்க வேண்டும் என ஆப்கான் வீரர் கேள்வி கேட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பராகவும், அதிரடி துடுப்பாட்டவீரராகவும் இருப்பவர் முகமது ஷேசாத்.

இதுகுறித்து முகமது ஷேசாத் கூறுகையில் "எனது உடல் பிட்னெஸ்ஸிற்காக அதிக அளவில் பயிற்சி எடுக்கிறேன். ஆனால், எனது உணவு முறையில் என்னால் சமாதானம் செய்து கொள்ள முடியாது. நான் விராட் கோஹ்லி போல் உடலை பிட்னெஸ் ஆக வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அது சாத்தியமில்லை. ஆனால், அதிக அளவில் உடற்பயிற்சி செய்து வருகிறேன்.

என்னால் விராட் கோஹ்லியை விட அதிக தூரத்திற்கு மிகப் பெரிய சிக்ஸ் விளாச முடியும். அப்படி இருக்கையில் அவரைப் போல் உணவு கட்டுப்பாட்டை நான் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?" என்று எதிர்கேள்வி எழுப்புகிறார்.

ஆப்கானிஸ்தான் அணியின் தொடக்க துடுப்பாட்டவீரராக களம் இறங்கி விளையாடி வரும் ஷேசாத், அந்த அணியின் வெற்றிக்கு மிகப்பெரிய அளவில் உதவியாக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக கிண்ணத்தில் களமிறங்குவார் நெய்மர்



பாரிஸ்,மே05

சத்திரசிகிச்சை மேற்கொண்ட நெய்மர் பாரிஸ் திரும்பியுள்ளதால் ரஷ்ய உலகக் கோப்பையில் விளையாடுவார் என ரசிகர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பிரேசில் அணியின் கப்டனும் உலகின் தலைசிறந்த கால்பந்து வீரரும் ஆன நெய்மர் பாரிஸ் கால்பந்து லீக்-1ல் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிக்காக விளையாடி வந்தார். பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற போட்டியின்போது, அவரது கால் பாதத்தில் காயம் ஏற்பட்டது. இதற்காக மார்ச் 3-ம் திகதி அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

அறுவை சிகிச்சைக்குப்பின் ஓய்வு எடுத்து வந்த நெய்மர், மீண்டும் உடற்தகுதி பெறுவதற்கான பயிற்சிகளை செய்து வந்தார். உலகக்கோப்பைக்கு குறுகிய நாட்களே இருப்பதால், நெய்மர் கலந்து கொள்வாரா? என்ற கேள்வி எழுந்தது.

இதற்கிடையே அவருடைய டாக்டர், நெய்மர் சிறப்பான வழியில் குணமடைந்து வருகிறார் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் நெய்மர் பிரேசிலில் இருந்து பாரிஸிற்கு வந்ததாக கூறப்படுகிறது. உலகக்கோப்பைக்கு இன்னும் 40 நாட்களே உள்ள நிலையில் நெய்மர் காயம் குணமடைந்து பாரிஸூக்கு சென்றதால், உலகக் கோப்பையில் விளையாடுவார் என்று பிரேசில் ரசிகர்களுக்கு நம்பிக்கை வந்துள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.